# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்க, காடு (திருத்தச்) சட்டம்

---

*[1988 திசெம்பர் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: சதம் 60** **தபாற் செலவு: சதம் 75**

# 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்க, காடு (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 16/85

காட்டுக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்க, காடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காட்டுக் கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது : — 451 ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கு காடுகள் பாதுகாவலர், காடுகள் பிரதிப் பாதுகாவலர், காடுகள் உதவிப் பாதுகாவலர் அல்லது பெரும்பாகக் காட்டு அலுவலர் ஒருவர் ஆகியோரின் எழுத்திலான அனுமதியுடனன்றி குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 40 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவு, காடு தொடர்பான தவறொன்றுக்குக் குற்றவாளியென ஒப்புக்கொள்ளுபவரான அல்லது குற்றவாளியெனக் கண்டுபிடிக்கப்பட்டவர்களான ஆட்களுக்கு ஏற்புடையதாகாது.

40அ. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், காடு தொடர்பான தவறொன்றை ஒப்புக்கொள்பவரான அல்லது அத்தவறுக்குக் குற்றவாளியெனக் கண்டுபிடிக்கப்பட்டவரான ஆள் எவருக்கும் அல்லது அவர் தொடர்பாகவும் ஏற்புடையதாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 அ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"காட்டு அலுவலர்கள் முதலியவர்களுக்கு முட்டுக்கட்டையிடுதற்கான அல்லது அவர்களைத் தாக்குதற்கான தண்டம்.

49அ. இக்கட்டளைச்சட்டத்தின் கீழான தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் காட்டு அலுவலர், பொலிசு அலுவலர் அல்லது அதற்கெனச் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரான வேறு எவரேனும் அலுவலர் ஆகியோரை அச்சுறுத்துபவரான, அச்சுறுத்திப் பணியவைப்பவரான, தாக்குபவரான அல்லது அவர்களுக்கு முட்டுக்கட்டையிடுபவரான அல்லது வேறு ஏதேனும் வகையில் அவர்களுடன் தலையிடுபவரான ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டாயிரம் ரூபாவிற்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் :

ஆயின், பெரும்பாகக் காட்டு அலுவலர், அரசாங்க அதிபர் அல்லது பொலிசுக் கண்காணிப்பாளர் என்போரின் தரத்திற்குக் குறையாதவரான அலுவலர் ஒருவரின் அனுமதியுடனன்றி, இப்பிரிவின் கீழான குற்றவழக்கு ஒன்று தொடுக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (2) இப்பிரிவின்கீழ் கைது செய்பவரான அலுவலர் ஒவ்வொருவரும், அனுவசியமான தாமதம் இல்லாமல், கைதுசெய்யப்பட்ட ஆளை அண்மையில் இருக்கும் பொலிசு நிலையத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் அல்லது அனுப்பிவைத்தல் வேண்டும், அல்லது அப்பிரிவில் பொலிசு நிலையம் எதுவும் இல்லாதிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எத்தவறுக்கு குற்றஞ்சாட்டப்படுகின்றதோ அத்தவறினைக் காண்பிப்பதான கூற்று ஒன்றுடன் அப்பிரிவின் பெரும்பாக அரசிறை அலுவலர் முனனர் எடுத்துச் செல்லவேண்டும். அல்லது அனுப்பிவைத்தல் வேண்டும். பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலர் அல்லது பெரும்பாக அரசிறை அலுவலர் அனுவசியமான தாமதம் இல்லாமல், கைதுசெய்யப்பட்ட ஆளை அண்மையில் இருக்கும் நீதிவான் முன்னர் எடுத்துச்செல்லவேண்டும் அல்லது அனுப்பிவைத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் எவரேனும் ஆளின் கைதானது காடு பேணுநர் ஒருவரால் அல்லது வட்டாரக் காட்டு அலுவலர் ஒருவரால் செய்யப்படுமிடத்து, காடு பேணுநர் அல்லது வட்டாரக் காட்டு அலுவலர் கைதுசெய்யப்பட்ட ஆளைப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலர் மூலமாக அல்லது பெருமபாக அரசிறை அலுவலர் மூலமாக நீதிவான் முன்னர் கொண்டுவந்து நிறுத்துவதானது அனுவசியமான தாமதத்தை ஏற்படுத்தும் சாத்தியம் கொண்டதென அவர் அபிப்பிராயப்பட்டால் அத்தகைய ஆளை அத்தகைய காடு பேணுநர் அல்லது வட்டாரக் காட்டு அலுவலர் அண்மையில் உள்ள நீதிவான் முன்னர் கொண்டுவந்து நிறுத்தலாம்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அமைச்சரானவர்—

(அ) 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எவரையேனும், இக் கட்டளைச்சட்டத்தின் 24 ஆம், 27 ஆம், 37 ஆம் அல்லது 48 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக காட்டு அலுவலர் ஒருவரின் பணிகளைப் புரியுமாறு ;

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின், அல்லது 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஜனதா அரச அபிவிருத்திச் சபையின் அல்லது கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர் எவரையேனும், இக்கட்டளைச்சட்டத்தின் 27 ஆம், 37 ஆம் அல்லது 48 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக காட்டு அலுவலர் ஒருவரின் பணிகளைப் புரியுமாறு ; அல்லது

(இ) கிட்டம் செயற்படுத்தல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அமைச்சரின் அமைச்சிலுள்ள சிறப்புச் சேவை அலுவலர் எவரையேனும் அல்லது வன சீவராசிகள் திணைக்கள அலுவலர் எவரையேனும், இக்கட்டளைச்சட்டத்தின் 27 ஆம், 37 ஆம் அல்லது 48 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக, காடுகள் பாதுகாவலரின் பணிப்புகளுக்கு அமைய காட்டு அலுவலர் ஒருவரின் பணிகளைப் புரியுமாறு

அதிகாரமளிக்கலாம் என்பதுடன், அத்தகைய எவரேனும் ஊழியர் அல்லது அலுவலர் இப்பணிகளைப் புரிவதில் ஈடுபட்டுள்ளபோது காட்டு அலுவலர் ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (இ) இக்கட்டளைச்சட்டத்தின் கீழான தவறுகளை இணக்குவதில் பெற்றுக்கொள்ளப்பட்ட முழுமையான அல்லது பகுதியளவிலான பணத்தொகைகளையும் தகவல் தருநர் வெகுமதிக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அத்தகைய தவறுகளின் விடயத்தில் அரசாங்கத்தால், ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் கூட்டுத்தாபனத்தால் அல்லது எவரேனும் தனியாளினால் நிதியத்திற்கு அளிக்கப்படக்கூடியனவான அத்தகைய வேறு உதவுதொகைகளையும் அத்தகைய நிதியத்திற்குச் செலுத்துவதற்கும், அத்துடன் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, தகவல்தருநர்களுக்கும் காட்டு அலுவலர்களுக்குமான வெகுமதிகளையும், காட்டு அலுவலர்கள், பொலிசு அலுவலர்கள் அல்லது வேறு அலுவலர்கள் இக்கட்டளைச்சட்டத்தின் கீழான தமது தத்துவங்களை, கடமைகளை, அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் அவர்களுக்கு ஏற்பட்ட உடல் ஊறுகளுக்கான நட்டவீட்டையும் அல்லது அத்தகைய ஊறினால் மரணம் ஏற்படும்போது அவர்களது மரபுரிமையாளர்களுக்கான நட்டஈட்டையும் இக்கட்டளைச்சட்டத்தின் கீழான விளக்கங்களில் சான்றுகொடுக்கும் நோக்கங்களுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தருவதில் சாட்சிக்காரர்களால் உரியமுறையில் உறப்பட்ட பயணச் செலவுகளையும் மரத்தைக் கள்ளமாக வெட்டுவதையும் கள்ளமாக இடம்பெயர்ப்பதையும் தணிப்பதற்குத் திடீர் சோதனை நடாத்துவதற்கான செலவுகளையும், இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அவர்களது பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்காகக் காட்டு அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் உட்பட காட்டுப் பாதுகாப்புச் செயற்பாடுகளில் உறப்பட்ட செலவுகளையும் நிதியத்திலிருந்து செலுத்துவதற்கும் ஏற்பாடுசெய்வதற்கு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, "காட்டு அலுவலர்" என்னும் வரைவிலக்கணத்தில், அதன் "பாதுகாவலர்கள்" என்னும் சொல்லை உடனடுத்துப் பின்னர் "மேலதிகப் பாதுகாவலர்" என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.".